ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2323/21 - 2023 මාර්තු මස 14 වැනි අඟහරුවාදා - 2023.03.14

*2323/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சபரகமுக மாகாண மாகாண சபை

### சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்கள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (இ) யாப்பின் மூலமும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும், மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளரான திரு ரன்கொத் பேடிகே நொயெல் தசன்த ஸ்டீவன் அவர்கள், மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் பணி புரியும்போது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1 ஆம் பிரிவின் கீழான குற்றம் ஏதும் செய்துள்ளார்களா என்பதைப் பரிசோதிப்பதற்காக நியமனம் செய்த ஓய்வு பெற்ற நீதிமன்ற உத்தியோகத்தரின் விசாரணை அறிக்கை என்னிடம் கிடைத்துள்ளமையினாலும், மேற்கூறிய அறிக்கையின் பிரகாரம் திரு. ரன்கொத் பேடிகே நொயெல் தசன்த ஸ்டீவன் அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து முறைப்பாடுகளுக்கும் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டுள்ளமையினாலும், மேற்கூறிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகள், சாட்சிகள், தீர்மானங்கள் மற்றும் திரு ரன்கொத் பேடிகே நொயெல் தசன்த ஸ்டீவன் அவர்களுக்கு எதிராக என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள், சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் என்பன என்னால் முறைப்படி பரிசோதிக்கப்பட்டு, ஆராயப்பட்டதன் பின்பு மேற்கூறிய திரு ரன்கொத் பேடிகே நொயெல் தசன்த ஸ்டீவன் அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுள் ஒன்றை அல்லது சிலவற்றை செய்துள்ளார் என்பதைத் தீர்மானிப்பதற்கான போதியளவு சாட்சிகள் உள்ளன என நான்*

1A - PG 6258 — 07 (2023/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*திருப்தி அடைந்தமையினாலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (இ) யாப்பின் மூலமும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவின் பிரகாரம், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளரான திரு ரன்கொத் பேடிகே நொயெல் தசன்த ஸ்டீவன் அவர்களை மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலிருந்தும் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்தும் 2023.03.14. ஆம் திகதி தொடக்கம் உடனடியாக செயற்படும் வகையில் நீக்கம் செய்கிறேன்.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சபரகமுவ மாகாணம்.

*சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அலுவலகம்,*
*இரத்தினபுரி புதிய நகரம்,*
*2023, மாச்சு 13.*

EOG *03-175*